
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1271**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்



# ஜனநாயகன்

## சினிமா விமர்சனம்

தெரியாமல் மக்களால் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோசப் விஜய், என்ன செய்வது என்று தெரியாமல் விழிப்பதுதான், ‘ஜனநாயகன்’ கதை.

சுமாரான நடிகரான விஜய், ‘நீண்ட காலத்துக்கு சினிமாவில் தாக்குப்பிடிக்க முடியாது’ என்பதால், அரசியலில் காலடி எடுத்துவைக்கிறார். போராட்டம், பொதுக்கூட்டம் என்றாலே ஹீரோவுக்கு அலர்ஜி. அவ்வப்போது பனையூர் வீட்டு ஜன்னலில் இருந்து தலையை மட்டும் நீட்டினாலும் அவர் சினிமாவைவிட உணர்ச்சிகரமாக நடித்து, மக்களின் வாக்குகளைப் பெற்று முதலமைச்சராகிவிடுகிறார். ஆனால் அதற்குப் பின்னால், விஜய் ஒரு ஹீரோ அல்ல ஜீரோதான் என்று மக்கள் உணர்ந்துவிடுவதுதான் க்ளைமாக்ஸ்.

மார்க் : -5/100




படத்தின் ஹீரோ விஜய்தான் என்றாலும் ஃபைனான்சியர் ஆதவ் அர்ஜுனாதான் அதிகம் வசனங்கள் பேசுகிறார். ஒரு கட்டத்தில், விஜய்க்கு இந்தப் படத்தில் வசனமே கிடையாதோ என்று நினைக்கும்போது, வாயைத் திறந்து வசனம் பேசுகிறார். கைதட்டலாம் என்று ஆடியன்ஸ் நினைக்கும்போது, அத்தனையும் ‘பீப்’ சவுண்டு விடும் அளவுக்கு ஆபாச வசனங்கள். 9-5 கால்ஷீட்டில் நடித்திருக்கும் விஜய், அவ்வப்போது ரீல்ஸ் கண்டென்ட்டுகளைத் தந்துவிட்டு காணாமல் போய்விடுகிறார். படத்தில் மெயின் வில்லன் என்று சொல்லப்படும் டெல்லி வில்லன் வரும் காட்சியில் எல்லாம் ஹீரோ விஜய், அவர் பெயரையே சொல்லாமல் பம்மிப் பதுங்குவது நல்ல காமெடி.

படத்தில் புஸ்ஸி ஆனந்த், ராஜ்மோகன், நிர்மல்குமார், கீர்த்தனா என்று ஏராளமான துணை நடிகர்கள். போதாக் குறைக்கு பக்கத்து தியேட்டரில் ஓடும் அ.தி.மு.க. சினிமாவில் இருந்தும் ஏராளமான துணை நடிகர்களை இழுத்துவந்து நடிக்க வைத்திருக்கிறார்கள்.

ஜால்ரா என்ற ஒரே ஒரு இசைக்கருவியைப் படம் முழுவதும் பயன்படுத்தியிருப்பது, உலக சினிமாவில் புதுமை. படத்தின் துணை நடிகர்களும் அடுத்த தியேட்டரில் இருந்து இழுத்துவரப்பட்ட துணை நடிகர்களும் ஜால்ராவைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், அவ்வப்போது பிரபல ஊடகவியலாளர்களும் இந்த இசைக்கருவியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

படத்தின் சிறப்பு அம்சமே ஒளிப்பதிவுதான். கேமரா இருந்தாலும் துணை நடிகர்கள் எல்லோரும் ஆளுக்கொரு செல்போனுடன் தங்களைத் தாங்களே வீடியோ எடுத்துக் கொண்டே நடித்திருக்கிறார்கள். திடீரென்று துணை நடிகர்கள் ஸ்கிரீனை விட்டு இறங்கி, தியேட்டரிலும் ரீல்ஸ் எடுக்கிறார்கள்.

படத்தில் ஒரே ஒரு பாட்டு. ‘ஓடு ஓடு ஓடு’ என்ற அந்தப் பாடலை ஹீரோ விஜய் பாடும்போது, அவர் ‘தலைவா’ ரிலீஸின்போது ஜெயலலிதாவைப் பார்க்க ஓடியது, கரூரில் பின்னங்கால் பிடரியில் தெறிக்க ஓடியது, டெல்லியில் பத்திரிகையாளர்களைப் பார்த்து ஓடியது ஆகிய காட்சிகள் பின்னணியில் ஓடுகின்றன. மக்களும் தியேட்டரை விட்டு ஓடுவதுதான் க்ளைமாக்ஸ்.

# மூடு... மூடு...

கண்ண மூடு, வாய மூடு, காத மூடு...

கட்சி தொடங்கி, குறுகிய காலத்திலேயே த.வெ.க. நிர்வாகிகள்மீது பாலியல் புகார்களும் சர்ச்சைகளும் ஏராளம். அவர்களைக் கண்டுகொள்வதே இல்லை. மாறாக, குற்றம் சாட்டியவர்களையே கட்சியில் இருந்து நீக்குகிறார்கள். பாசிச பா.ஜ.க. அத்தனை திட்டங்களையும் தமிழ்நாட்டில் செயல்படுத்தத் தொடங்கிவிட்டது. எதிர்த்துக் கேள்வி கேட்க வாயைத் திறப்பதில்லை. மேகதாது முதல் மின்வெட்டு வரை மக்கள் சந்திக்கும் அன்றாடப் பிரச்சினைகளில் எழும் குரல்களைக் கேட்பதே இல்லை. ஒட்டுமொத்தமாகக் கண்களை, காதுகளை, வாயை இறுக்கி மூடிக்கொண்டிருக்கிறார், சி.ஜோசப் விஜய்.



## பண்பாட்டு அரசியலில் பசு!




இந்தியச் சமூகத்தில் ஆரியம் கட்டமைத்துள்ள ‘பசு புனிதம், எருமை தீட்டு’ என்ற கோட்பாடுகளின் பின்னணியில் இருக்கும் பண்பாட்டு அரசியலைத் தோலுரித்துக் காட்டும் சிறு நூல், ‘புலித்தோல் போர்த்திய பசு’.

திரைப்படப் பாடலாசிரியர் யுகபாரதி எழுதியுள்ள இந்த நூல், பசுவைப் புனிதத்தின் குறியீடாகவும் எருமையை இழிவு மற்றும் தீட்டின் அடையாளமாகவும் உருவாக்கிய அரசியலைத் தமிழிலக்கியம், பண்பாட்டு மரபு, வரலாற்றுச் சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் விமர்சனபூர்வமாக அணுகியுள்ளது.

திருவள்ளுவரின் ‘பசுத்தோல் போர்த்திய புலி’ என்ற உவமையில் தொடங்கி, குறுந்தொகையில் வரும் எருமையின் படிமம் மற்றும் மனுநீதிச் சோழன் கதையின் அரசியல் வரை பல விசயங்களை இதில் அலசியுள்ளார்.

விலங்குகளுக்குச் சமூகத்தில் வழங்கப்படும் குணாதிசயங்களும் மதிப்பீடுகளும் இயற்கையானவை அல்ல; அவை அதிகார மையங்களால் உருவாக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டமைப்புகள் என்கிறார். இதிலிருந்துதான் ‘பசு புனிதம்’ என்கிற பிம்பம் கட்டமைக்கப்பட்டதென தர்க்கபூர்வமாக விளக்கி இருக்கிறார்.

ஆனால், பசுவை மட்டுமே உயர்த்திப் பேசும் ஒற்றைப் பார்வைக்கு மாற்றாக, தமிழ்ப் பண்பாட்டின் பன்முக உயிரியல் மற்றும் வாழ்வியல் பார்வையைப் பழந்தமிழ் இலக்கியங்கள்வழி முன்வைக்கிறார்.

இலக்கியம், வரலாறு, நாட்டுப்புறவியல், திரைப்படம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலிருந்து பெறப்பட்ட சான்றுகளைச் சமகால அரசியல் போக்குகளுடன் இணைத்து வாசிப்பதன்மூலம், இந்நூல் கருத்தியல் பார்வையை முன்வைக்கிறது.

ரூ.25 விலையில், பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்த சிறிய நூலைப் பெற, 94445 67935 எண்ணுக்கு அழைக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



ஜி.ஜி.அய்யாவுப்பாண்டியன்



### தலைவரைச் சந்தித்த நினைவுகள்...

1999-ஆம் ஆண்டு, விருதுநகரில் கழக நிகழ்ச்சிக்கு வருகைதந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து மகிழ்ந்தேன். அன்றைக்கு, ஒருங்கிணைந்த விருதுநகர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராகவும், திருவில்லிபுத்தூர் நகர் 33-வது வார்டு செயலாளராகவும் இருந்து கழகப் பணியாற்றினேன். தலைவர் பாராட்டியது மறக்க முடியாத நினைவு.

**- ஜி.ஜி.அய்யாவுப்பாண்டியன், நகரக் கழகச் செயலாளர், நகர்மன்ற உறுப்பினர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### மக்கள் கணித்த கலைஞர்!

1960-ஆம் ஆண்டு, கழகத்தின் மூன்றாவது பொது மாநில மாநாடு கூடுவதற்கு முன், மாநில அமைப்புகளின் தேர்தல், 1960 ஜூலை மாதத்துக்குள் முடிக்கத் திட்டமிட்டது. அக்டோபர் மாதத்தில் பொதுச்செயலாளராக இருந்த நாவலர் அவர்களின் பதவிக்காலம் முடிந்து, புதிய பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தலைமைக் கழக நிர்வாகிகள், அடுத்த பொதுச்செயலாளர் யார்? என முடிவுக்கு வருவதற்கு முன்பே, பொதுமக்கள் வெளிப்படுத்திய கருத்துகளில் கலைஞர் பெயர் முதலில் இருந்தது.” உணர்ச்சிமிக்க பேச்சாளர், கழகம் இடும் கட்டளையைப் பம்பரமாய்ச் சுழன்று முடிக்கும் ஆற்றல் படைத்த செயல்வீரர், தொண்டராகவும் இருக்கின்ற ஒரு தலைவர், அவர்தான் அடுத்த பொதுச்செயலாளராக வரக்கூடும்” என்று குறிப்பிட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900